1972 ஏப்ரல் 1]

THE HON. THIRU S. RAMACHANDRAN : Owing to mixed traffic in all main roads and also due to pedestrian crossings and due to extra expenditure that is likely to be involved, for the time being the proposal is shelved.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக தானியங்கி அடையாள விளக்குகள் மதுரையில் ஏராளமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் வைக்கப்பட வேண்டிய இடங்கள் இருக்கின்றன. ஆகவே, இதை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் பொருத்துவதற்கு படிப்படியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

Mutts of Kanchi Sankaracharya

* 836 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Mutts of Kanchi Sankaracharya have been drawn under the purview of the Hindu Religious Endowment Department;

(*b*) if not, the reasons; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) இம்மடத்தின் சகாயத்தொகையை இதன் வருவாய் ரூ. 3,74,731 மீது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே காஞ்சி சங்கராச்சாரியார் மடம்போல எத்தனையோ மடங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. மடாதிபதிகளுக்கு இந்தியா பூராவும் சுற்றிவர டெல்லி சர்க்கார் இலவச ரயில்வே பாஸ்கூட அளித்திருக்கிறார்கள். எனவே, மடாலயங்களின் சொத்துக்களைக் கணக்கெடுத்து, நமது அரசு உபரியாக இருப்பதைக் கைப்பற்றுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எத்தனை மடங்கள் என்கிற கணக்கு விவரம் இல்லை. மடத்தினுடைய சொத்துக்களிலிருந்து செலவு செய்யக்கூடியவற்றை அறநிலைய ஆணையாளரின் ஒப்புதலைப்

பெற்றுத்தான் செலவு செய்கிறார்கள். அந்த மடங்களையெல்லாம் அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான் நிர்வாக அதிகாரிகளைப் போடவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அறநிலைய ஆணையாளரின் ஒப்புதலைப் பெற்றுத்தான் செலவு செய்யப்பட வேண்டுமென்று கூறுகிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல் வேறாக இருக்கிறது. செய்யப்பட்ட செலவுகள் அறநிலைய ஆணையாளருக்கு அறிவிக்கப்படுகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அப்படியும் சில இடங்களில் நடக்கிற காரணத்தால்தான், ஆங்காங்கே நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is this Government aware (i) that the Kanchi Mutt is one of the poorest mutts in Tamil Nadu and (ii) the Head of the Kanchi Mutt is leading the most ideal life, living in a hut, not going in trains, buses or cars and not using electricity, but going on foot and living on only three morsels of food everyday and is there necessity to interfere in such cases unnecessarily? If there is need for interference we have no objection.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, காஞ்சி மடத்திற்கு 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக வருமானம் வருவதாகத் தெரிகிறது. இது ஏழை மடம் என்று கூற முடியாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் ரயிலில் ஏறுவதில்லை. கால்நடையாகத்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மடங்களைவிட குன்றக்குடி மடத்தைப்பற்றிக் குறைகள் வந்திருக்கிறதே அதுபற்றி ஆராய்ந்து சொல்ல இதுவரை ஏதாவது கமிட்டி போடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கால்நடையாகச் செல்வதற்கும், கணக்குகளைச் சரிப்பார்ப்பதற்கும் சம்பந்தம் இல்லை (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு). இரண்டும் சரியாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நிர்வாக அதிகாரிகளைப் போட வேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றி வருகிறோம்.